[9th September 1959

SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் அமைச்சர் அவர்கள் கார்ப்பொரேஷன் கழிவு நீர் விழுவதாகத் தெரிவித்தார்கள். ஜெனரல் ஆஸ்பத்திரி கழிவுநீர் விழுந்து ரொம்ப நாற்றம் அடிக்கிறது என்பதை கனம் சுகாதார அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு அதை நிறுத்துவதற்கு தக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அதனால் பேஸின் பிரிட்ஜில் நாற்றம் அடிக்காது.

THE HON. SRI P. KAKKAN : ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து கடைசியாக வந்து விழுகிறது. அதற்கு முன்பாக நகரசபையிலிருந்து விழுகிறது. எந்த நீரும் விழாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

SRI A. VEDARATHNAM : ஸார், மத்திய அரசாங்கம் நியமித்த வாட்டர்வேஸ் கமிஷன் தன்னுடைய ரிப்போர்ட்டைச் சமர்ப்பித்துவிட்டதா ? அதனுடைய ரிப்போர்ட்டின் பிரதி நமது அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? இந்த பக்கிங்ஹாம் கெனலைப் பற்றி என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று தயவுசெய்து அறிவிப்பார்களா ?

MR. SPEAKER : அமைச்சர் அவர்கள் இதற்கு பதில் சொல்லப் போகிறார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இதற்கு தனியாக ஒரு கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

Stage carriage permits

*252 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கூட்டுறவு முறையில் பஸ் பர்மிட் வாங்க சலுகைகள் உண்டா ?

(ஆ) மாஜி ராணுவத்தினருக்குத் தனியாக சலுகைகள் உண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The Motor Vehicles Act provides that, other conditions being equal, an application for a stage carriage permit from a co-operative society shall be given preference over an application from an individual. Government have laid down certain principles and criteria to be followed by the authorities while considering applications for permits. According to it, a co-operative society will be entitled to one mark.

(*b*) No, Sir.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : With regard to question sub-section (*b*) may I know whether besides ex-servicemen there are also outsiders in the society?

T:1 HON. SRI V. RAMAIAH : If anyone organises the co-operative sciety and cmes for permit that co-operative society will be given preference by one mark apart from other marks given to it. I am not aware whether there are only ex-sevicemen or outsiders.

SRIMATHI T. N. ANANDANAYAKI : இந்த கூட்டுறவு சொஸைட்டிகளுக்கு இந்த மாதிரி ரூட்டுகளை கொடுக்கும்பொழுது தனி கவனத்தை செலுத்தவேண்டும் என்று சட்டத்தில் 56-ம் வருஷத்துச் சட்டத்தில் இருக்கிறது. இம்மாதிரி இருந்தும் ஜி.ஓ-வில் ஒரு மார்க் கொடுக்க வேண்டுமென்று போடுவது இரண்டுமுறை ஒரு சொஸைட்டிக்குச் சலுகை கொடுப்பது போல் இருக்கிறது. ஆகையால் இது ஜி.ஓ.-வில் இல்லாமல் இருக்கலாம் லிமிடெட் கம்பெனிக்கு எதற்காக தனியாக ஒரு மார்க் கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

9th September 1959]

MR. SPEAKER : Here is a reference to the giving of mark to the co-operative society and not to a limited company.

THE HON. SRI V. RAMAIAH : லிமிட்டெட் கம்பெனிக்கு என் தனிப்பட்ட முறையில் மார்க் கொடுக்கிறோம் என்பதைப் பற்றி தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன். அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய சட்டப்படிதான் கூட்டுறவு சொஸைட்டிக்கு, அரசாங்கத்தினுடைய கொள்கைக்குத் தகுந்த முறையில் ஒரு மார்க் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறது இந்த ஜி.ஓ-விலே.

MR. SPEAKER : The Hon. Finance Minister is away. Since he is unable to be present here, question No. 253 may be taken up on the 11th September 1959. I have allowed it.

Questions are over.

SRI S. PAKKIRISAMI PILLAI : I have given notice of a short notice question. I want to know what happened to that.

MR. SPEAKER : I must remind the hon. Member that I have said many a time that the giving of notice of short notice questions cannot be raised in this House. If he wants any information, let him come to my chamber and I shall explain to him the position. If the hon. Member persistently raises this question hereafter, I will not allow him.

[*Note*.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ADJOURNMENT MOTIONS.

(1) CLOSURE OF SUPPLY OF WATER FOR MARUDUR AND KEELAKAL FROM PAPANASAM AND MANIMUTHAR.

MR. SPEAKER : I have received notice of an adjournment motion from Sri V. K. Kothandaraman. The adjournment motion reads thus—

"That the proceedings of the House be adjourned for discussing the following matter of urgent public importance, viz. :

'the serious situation caused by the closure of supply of water for Marudur and Keelakal from the Papanasam and the Manimuthar and the consequent failure of crops and heavy loss expected '."

May I ask the Hon. Minister whether he can clarify me on this point. Is it urgent or of recent occurrence?

THE HON. SRI P. KAKKAN : கனம் சபாநாயகர் அவர்களே, இரண்டு அல்லது மூன்று தினங்களுக்கு முன்பு மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. வீரபாகு அவர்கள் என்னிடத்தில் சொன்னார்கள். நான் உடனடியாக இர்ரிகேஷன் சீப் என்ஜினியர் அவர்களிடமும் எலக்ட்ரிஸிட்டி சீப் என்ஜீனியர் அவர்களிடம் சொல்லி அதிகப்படி தண்ணீர்